DINAMALAR 25 SEP 2010

# தமிழகத்தில் ஆனந்த அலை மகா சத்சங்கம்

## ஈஷா யோகமையம் முடிவு

பேரூர், செப். 25 -

''தமிழகம் முழுக்க ஆனந்த அலை மகா சத்சங் நடத்தப்படும்,''என, ஈஷா யோகமையத்தின் நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் தெரிவித்தார்.

ஈஷா யோகமைய நிறுவனர் சத்குரு ஜக்கி வாசுதேவ் நிருபர்களிடம் கூறியதாவது:

ஈஷா யோகமையம் சார்பில் மதம், அரசியல் கலப்பில்லாமல் சத்சங் நடத்தப்படுகிறது. இதை 'ஆனந்த சங்கமம்' என்கிறோம்.

அகத்திய முனிவர் தென்னிந்தியா முழுவதும் ஒரு மதமாக இல்லாமல், ஒரு போதனையாக இல்லாமல், யோகாவை மக்கள் வாழ்க்கையில் ஒரு அங்கமாக இடம்பெறச்செய்தார்.

எனவே, இக்கலாச்சாரத்தில் மக்கள் நிற்பது, நடப்பது, உண்பது என ஒவ்வொன்றையும் யோகாவாகவே செய்து வந்தனர்.

ஆனால், இவையெல்லாம் தற்போது மறைந்து வருகிறது. அந்தக் கலாச்சாரத்தை நம் மக்களின் வாழ்வில் மீண்டும் எடுத்து வர வேண்டும். மேலும், நம்கலாச்சாரத்தில் கொண்டாட்டம் என்பது வாழ்க்கையின் அங்கமாக இருந்தது. உழவர் நிலம் உழுவது, விதை விதைப்பது, அறுவடை செய்வது போன்ற எந்தவொரு நிகழ்ச்சியையும் ஆட்டம், பாட்டு என்ற ஆனந்த நிலையில் செய்து வந்தனர்.

ஆனால், தற்போது இந்த ஆட்டமும், பாட்டும் மக்களின் கலாச்சாரத்திலிருந்து விலகி வருகிறது. இந்நிலை மாறி, மக்களின் வாழ்க்கையே ஒரு யோகாவாக நடைபெற வேண்டும். அவர்களது கலாச்சாரம் மீண்டும் ஆனந்தம் நிறைந்ததாக மாற வேண்டும். இதற்காகத்தான் ஆனந்த அலை எனப்படும், இந்த ஆனந்த சங்கமங்கள் தமிழ்நாட்டில் நடைபெற உள்ளன. மொத்தம் 16 ஆனந்த சங்கமங்கள் நடைபெற உள்ளன. முதல் ஆனந்த சங்கமம் மதுரையில் வரும் 26ம் தேதி நடக்கவுள்ளது. தமிழகம் வேகமாக பாலைவனமாக மாறும் ஆபத்து உள்ளதாக ஐ.நா.,வின் ஒரு ஆய்வறிக்கை கூறுகிறது. எனவே, 2004ம் ஆண்டு, தமிழ்நாட்டில் 11.4 கோடி மரங்கள் நட்டு பசுமைப்பரப்பை 33 சதவீதமாக அதிகரிக்க ஈஷா பசுமைக்கரங்கள் திட்டம் துவக்கப்பட்டது.

மதுரை சத்சங்கம் நடக்கும் அன்றே மதுரை பசுமை இயக்கமும் தொடங்கப்படுகிறது. இதன் மூலம் பசுமைப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. தொடர்ந்து, ஆசனப்பயிற்சிக்கான ஆசிரியர் பயிற்சியும் ஈஷாயோக மையத்தில் நடக்கவுள்ளது.

இவ்வாறு, ஈஷா யோக மைய நிறுவனர் தெரிவித்தார்.

**மகாசத்சங்க நிகழ்ச்சி விபரம்:** ஈஷா மகாசத்சங் செப்.26ம் தேதி துவங்கி, 2011, ஜன.2ம் தேதி வரை தமிழகம் முழுவதும் 16 இடங்களில் நடக்கிறது. செப்.26ல் மதுரை, அக். 1ல் திண்டுக்கல், அக். 2ல் திருச்சி, அக். 23ல் தஞ்சாவூர், அக். 24ல் சிதம்பரம், அக். 30ல் பொள்ளாச்சி, அக். 31ல் கோவை, நவ. 26ல் வேலூர், நவ.27ல் திருவண்ணாமலை, நவ. 28ல் புதுச்சேரி, டிச. 11ல் ஈரோடு, டிச.12ல் சேலம், டிச. 24ல் தூத்துக்குடி, டிச. 25ல் ராஜபாளையம், டிச. 26ல் நாகர்கோவில், 2011, ஜன. 2ல் சென்னை ஆகிய இடங்களில் சத்குரு தலைமையில், மகாசத்சங்க நிகழ்ச்சி, பசுமை நகர இயக்கமும் நடைபெற உள்ளது.